
# உடன்பிறப்பே... 18

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வீரபாண்டியார் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**



## சேலத்துச் சிங்கம்

# வீரபாண்டியார்



ஓவியம் : ரவி பேலட்

கழகத்தின் பெருமைமிகு இருவண்ணக் கொடியை, 1995-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் நாள் சேலம், ஆத்தூர் பேருந்து நிலையம் அருகில், கலைஞர் ஏற்றி வைத்தார். ஏதேதோ பொய்யான தகவல்களைக் கூறி, கலைஞர் கொடியேற்றிய கம்பத்தினைக் காவல்துறையின் ஒத்துழைப்புடன் வெட்டிச் சாய்த்தனர் அ.தி.மு.க.வினர். அப்போது வெகுண்டெழுந்தது சேலத்துச் சிங்கம்.

**'என்னோடு வருபவர்கள் வாருங்கள், திரும்பி வருவோம் என்று எண்ணுபவர்கள் என்னுடன் வர வேண்டாம்'**, எனக் கூறி சேலத்திலிருந்து 500 வாகனங்களில் கழகத் தோழர்களுடன் ஆத்தூர் புறப்பட்டார். 144 தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டு, துணை ராணுவம் வரவழைக்கப்பட்டது.

எதற்கும் அஞ்சவில்லை. வார்டுகள்தோறும் கழகக் கொடி ஏற்றப்பட்டது. எந்த இடத்தில் தன் தலைவர் ஏற்றிய கொடியை வெட்டி வீசினார்களோ அதே இடத்தில் மீண்டும் கழகக் கொடியைப் புதுப்பித்து அமைத்தார். வரலாற்றில் இந்தச் சம்பவம் வீரபாண்டியார் எனும் உடன்பிறப்பு, கருப்பு - சிவப்பின் மீதும் கலைஞர் மீதும் அவர் கொண்டிருந்த கொள்கைப் பற்றுக்கான சிறிய எடுத்துக்காட்டு.

"சரித்திரத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு ஒரு ஊமைத்துரையைப் போல இதிகாசத்தில் முருகனுக்கு ஒரு வீரபாகுவைப் போல எனக்கு என் தம்பி வீரபாண்டி" எனத் தன் உடன்பிறப்பைப் புகழ்ந்துரைத்தார் முத்தமிழறிஞர்.

> **"சின்ன வயதில் ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பதே பெரிய விஷயம். இந்தத் தம்பி என் இதயம் கவர்ந்த தம்பியாக, தன்னை வெல்வான் - தரணி வெல்வான்!"**

### அண்ணாவிடம் ஈர்ப்பு

சேலம் மாவட்டம், பூலாவாரி கிராமத்தைச் சேர்ந்த சோலை கவுண்டருக்கும் சின்னம்மாளுக்கும் 26, ஜனவரி, 1939-இல் பிறந்தார் வீரபாண்டியார். ஆறாவது குழந்தையாகப் பிறந்ததால் அவருக்கு, 'ஆறுமுகன்' எனப் பெயரிட்டனர். ஆனால், அந்த ஆறுமுகத்தை ஏறுமுகமாக மாற்றியவர்கள், திராவிட இயக்கத் தலைவர்கள்.

எட்டிமரத்துக்காடு எனும் ஊரில் செயல்பட்டு வந்த ஓராசிரியர் பள்ளியில் 5-ஆம் வகுப்பு வரை படித்தார். பின்னர், பள்ளி உயர் வகுப்புகளை சேலம் இந்து மகாசன பள்ளியில் படிக்க ஆசைப்பட்ட வீரபாண்டியாருக்கு அங்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அப்படி, கல்வி உரிமை மறுக்கப்பட்ட வீரபாண்டியாருக்கு, பின்னாளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராகப் பொறுப்பு வழங்கி, அழகு பார்த்தது கழக அரசு.

துடிப்புமிக்க மாணவராகத் திகழ்ந்த அவரிடம், இயல்பாகவே அரசியல் ஆர்வம் துளிர்விட ஆரம்பித்தது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர், பேராசிரியர் என திராவிட இயக்கத் தலைவர்கள், சேலம் மாவட்டத்தில் எங்கு கூட்டம் போட்டுப் பேசினாலும், அதைக் கேட்க வீரபாண்டியாரின் கால்கள் நடக்க ஆரம்பித்தன. அன்று அவர் எடுத்து வைத்த காலடித் தடங்கள், அவரை தி.மு.கழகம் எனும் சமுத்திரத்தில் கொண்டு வந்து சேர்த்தது.

1956- இல், தான் பிறந்த பூலாவாரி கிராமத்தில் முதல்முறையாகக் கழகத்தின் கிளையைத் தொடங்க நினைத்தவர். தன் நண்பர்களை எல்லாம் இணைத்து அதற்கான பணிகளைத் தொடங்கினார். அந்தக் கிளையில் முதல் 25 உறுப்பினர்களைச் சேர்க்க ஒரு மாதம் கடந்ததாம். ஆனால், பின் நாட்களில் வீரபாண்டியார் என்ற பெயருக்குப் பின்னால் பல லட்சம் பேர், சேலம் பகுதியில் திரண்டு நின்றனர். இந்தப் பெரும் மாற்றத்தை அந்த மாவட்டத்தில் நிகழ்த்திக் காட்டியவர் வீரபாண்டியார்.

### தந்தையை எதிர்த்த மகன்

பூலாவாரி கிராமத்தில் வீரபாண்டியாரின் தந்தை சொல்லுக்கு அந்த ஊரே கட்டுப்பட்டு இருந்தது. அவர் சொல்பவருக்குத்தான் ஒட்டுமொத்த ஊரும் வாக்களித்து வந்த காலக்கட்டம் அது. 1957-இல் முதல் முறையாகத் தேர்தலைச் சந்தித்தது கழகம். வீரபாண்டித் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு அதரவு அளித்தார் வீரபாண்டியாரின் தந்தை. ஆனால், கழகத்துக்காகத் தந்தையை எதிர்த்து, உதயசூரியனுக்காகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார் வீரபாண்டியார். அந்தத் தேர்தலில் வீரபாண்டித் தொகுதியில் கழகம் தோற்ற போதும், வீரபாண்டியாரின் பூலாவாரி கிராமத்தில் கழகத்துக்குத்தான் அதிக வாக்குகள் கிடைத்தன.

தொடர்ந்து, 1958-இல் உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிப்புகள் வெளியாகின. அதிலும் ஊராட்சி மன்றத் தேர்தலில் தன் தந்தையின் எதிர்ப்பை மீறி, போட்டியிட்டு வென்றார். அது ஊரே கொண்டாடும் வெற்றியாக அமைந்தது. ஊராட்சி மன்றத் தலைவராக அவர் செய்த முக்கியமான பணி, ஊராட்சிக்கு எனப் புதிய அலுவலகம் கட்டியது. அதைத் திறந்து வைக்க அவர் அணுகிய தலைவர் பேரறிஞர் அண்ணா.

அவரின் அழைப்பை ஏற்று, பூலாவாரி வந்த அண்ணா, புதிய ஊராட்சி மன்ற அலுவலகத்தையும் திறந்து வைத்தார். அப்போது பேசுகையில், "சின்ன வயதில் ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பதே பெரிய விஷயம். இந்தத் தம்பி என் இதயம் கவர்ந்த தம்பியாக, தன்னை வெல்வான் - தரணி வெல்வான்" என்றார். அது மெய்யானது.

### அண்ணா அறிவித்த வேட்பாளர்

1962-இல் நடந்த தேர்தலில், வீரபாண்டி தொகுதிக்கான வேட்பாளராக வீரபாண்டியாரை அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. அதன் பலனாக அவருக்குப் பெரும் வெற்றியைத் தந்தனர் தொகுதி மக்கள். அப்போது கழகம் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பேரில் வீரபாண்டியாரும் ஒருவர்.

கழகம் அறிவிக்கும் போராட்டங்களை எல்லாம், முன்னின்று நடத்தியவர் வீரபாண்டியார். 1965-இல் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை, சேலம் தபால் நிலையம் முன்பு தலைமை தாங்கி நடத்தினார். அதற்குப் பரிசாக எட்டு வார காலம் கடுங்காவல் தண்டனையைத் தந்து, கோவை மத்திய சிறைக்கு அனுப்பி வைத்தனர் ஆட்சியாளர்கள்.

எந்தச் சிறைக்கும் கலங்காத உடன்பிறப்புக்கு, மிசா காலச் சிறைவாசமும் காத்திருந்தது. தன் அன்பு மகளின் திருமணத்தை நடத்திவிட்டு, வீடு திரும்பும் போது பாதியிலே வழிமறித்துக் கைது செய்து மிசா கைதியாக்கினர்.

### வேளாண் துறை வீரர்

1974-ஆம் ஆண்டு முதன்முறையாக சேலம் மாவட்டத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரபாண்டியார் தொடர்ந்து 7 முறை கழகத்தின் உட்கட்சித் தேர்தலில் போட்டியிட்டு வென்று மாவட்டச் செயலாளராகப் பணியாற்றினார். பதினேழு சட்டமன்றத் தொகுதிகளும், மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளும் நிறைந்த அன்றைய சேலம் மாவட்டத்துக்கு என ஒரு கழக அலுவலகம் இல்லாமல் இருந்தது. அதற்காக, சேலத்தில் கலைஞர் மாளிகையை 1996-இல் உருவாக்கி, ஆகஸ்ட் 8-ஆம் தேதி கலைஞரை அழைத்துத் திறப்பு விழாவையும் நடத்தினார்.

1962-ஆம் ஆண்டு முதல் 2011-ஆம் ஆண்டு வரையிலும் சுமார் 26 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகவும், 6 ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், அதே காலக்கட்டத்தில் 12 ஆண்டுகள் அமைச்சராகவும் பொறுப்பாற்றியுள்ளார் வீரபாண்டியார். அதில் ஓராண்டு உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பதினோரு ஆண்டுகள் வேளாண்மைத் துறை அமைச்சராகவும் செயல்பட்டுள்ளார். கலைஞர் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் திட்டத்தைத் தொடங்கி வைத்த போது, வேளாண் துறை அமைச்சராகச் செயலாற்றியவர் வீரபாண்டியார்தான்.

அதேபோல், சேலம் இரும்பாலை, இருப்பாளிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சங்ககிரி- ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், சேலம் இரயில்வே கோட்டம், மேட்டூர் அரசு கலைக்கல்லூரி, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, பெரியார் பல்கலைக்கழகம் என எண்ணற்றத் திட்டங்களை, சேலம் மக்களின் நன்மைக்காகப் பெற்றுத் தந்தவர்.

அத்தகைய செயலாற்றல் மிக்க கலைஞரின் உடன்பிறப்பு, 2012-ஆம் ஆண்டு நவம்பர் 23 -ஆம் தேதி மறைந்தார். "சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!" என இரங்கல் எழுதினார் கலைஞர். அந்த வருத்தம் கழகத்தின் வரலாற்றில் எப்போதும் எழுதப்பட்டிருக்கும்.

**...துடிக்கும்**

## ஆசிரியர்களின் முனைப்பே மாணவர்களின் வளர்ச்சி!

அரசின் முயற்சிகளோடு ஆசிரியர்களின் தன்முனைப்பும் சேர்ந்தால், அரசுப் பள்ளிகளின் சூழல் அடியோடு மாறும் என்பதற்கு, திருப்பத்தூர் மாவட்டத்தின் புதுப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியை உதாரணமாகச் சொல்லலாம்.

'ஸ்மார்ட் வகுப்பறை', சுகாதாரமான கழிவறை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், உணவருந்த தனி இடம், பசுமையான மரங்கள் பராமரிப்பு என இந்தப் பள்ளியின் வளாகமே மாணவர்களின் கற்றலுக்கு ஏற்றவையாக உருவெடுத்துள்ளன. இதற்கு அந்தப் பள்ளி ஆசிரியர்கள் தன்முனைப்போடு செயலாற்றுவதும் காரணமாக உள்ளது. பள்ளிக்கூடத்துக்குத் தேவையான உதவிகளைத் தன்னார்வலர்களிடமிருந்து பெற்றும் இங்குள்ள கட்டமைப்புகளை ஆசிரியர்கள் செய்துள்ளனர். ஆங்கில மொழி அறிவு, கணினிப் பயிற்சி ஆகியவற்றுக்குப் போதிய கவனம் கொடுப்பதற்கு ஏற்ப வசதிகளையும் ஆசிரியர்கள் உருவாக்கியுள்ளனர்.

மாணவர்கள் கற்றலில் சிறப்பாக விளங்க அரசின் திட்டங்களோடு, ஆசிரியர்கள், சமூகத்தின் பங்களிப்பும் சேர்ந்தால் அது அடுத்தக் கட்டத்துக்கு நகரும். அரசு முன்னெடுப்பதும் இதைத்தான். அதைச் செயல்படுத்திக் காட்டுகிறது புதுப்பேட்டை அரசுப் பள்ளி.

## ஃப்ளாஷ்பேக்





பரமசிவம்

### திருமணத்தில் உரை!

1984-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 7-ஆம் தேதி, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரவம்பட்டி கிளையின் அப்போதைய செயலாளர் மறைந்த மலையப்பன் அவர்களின் புதல்வர் திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்தை அன்றைய மாநில இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார். அப்போது மாவட்டப் பிரதிநிதியாக இருந்த எனக்கு மேடையில் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அன்றைய மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் மறைந்த பரிதி இளம்வழுதி அவர்களும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.பாவாணன் அவர்களும், ஒன்றியச் செயலாளர் பெ.மாரியய்யா அவர்களும் இந்தப் புகைப்படத்தில் இடம் பெற்றுள்ளனர்.

**-எம்.பரமசிவம், ஒன்றியக் கழகச் செயலாளர், புதுக்கோட்டை மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழகத்தின் எதிர்காலம்

**1977-ஆம் ஆண்டுத் தேர்தல், ஒவ்வொரு நாளும் பத்து அல்லது பதினைந்து கூட்டங்களிலும், ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்களுக்கும் சென்று வேனில் நின்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார் கலைஞர். பல்வேறு கருத்து வேறுபாடுகளால் கழகத்தில் இருந்து பிரிந்த கவியரசு கண்ணதாசன், கழகத்தின் வெற்றிக் காகக் குரல் கொடுத்தார். 'கழகத்தின் எதிர்காலமே, தமிழகத்தின் எதிர்காலம்' என்றும், உடன் இருப்பவர்களைக் கடைசி வரை காப்பாற்றுகிற தலைவர் என்றும் கலைஞரைப் புகழ்ந்தார். கழகத்துக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என உரை யாற்றினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 207




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.